OS No.39/2017

PW-2 -குமரேசன்

த/பெ.

நாள். 07.10.2025

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி-2 மற்றும் 3 தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. குற்ற எண். 132/2018 என்ற புகாரை நான் தான் கொடுத்தேனா என்றால் ஆமாம், அது மூன்றாம் பிரதிவாதி ரங்கதுரை மீது கொடுத்த புகார் என்றும் சொன்னால் சரிதான். மேற்படி புகார் முடித்து வைக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

2.லிங்கதுரை சீட் மோசடி செய்த விபரம் சம்பந்தப்பட்ட எந்த விதமான எழுத்துப்பூர்வமான புகார் நான் கொடுக்கவில்லை என்றால் ஆமாம் கொடுக்கவில்லை. பொதுஅதிகார பத்திரத்தில் நான் தான் முதல் சாட்சி என்றால் சரி, இரண்டாவது சாட்சி எங்களுடைய உறவினர் என்றும் சொன்னால் சரிதான். என் வீட்டின் மின் இணைப்பு கட்டணம் ஆகியவற்றை நான் தான் செலுத்தி வருகிறேன். கடந்த 20.10.2011 தேதியில் வீட்டு வரி இணைப்பு ரேணுகா பெயரில் மாறிவிட்டது என்றும் சொன்னால் சரிதான்.

3.என் மனைவி பெயரிலிருந்து ரேணுகா என்ற நபர் பெயருக்கு மின் இணைப்பு மாற்றப்பட்ட போது உடனடியாக சென்று கேட்டேன் இன்னும் ஒரு வருடம் கட்ட வேண்டும் என்றும் அதன் பின்பு மாற்றி தருவதாக சொன்னார்கள். 20.10.2011 ம் தேதி அன்று கிரையம் செய்த விபரம் எனக்கும் என் மனைவிக்கும் தெரியும் என்றால் சரிதான். மூன்றாம் பிரதிவாதி லிங்கதுரையின் இரும்பு குடோனில் தான் நான் வேலை செய்து வந்தேன் என்றால் ஆமாம். 2015 ஆம் ஆண்டு வரை அங்கு தான் வேலை செய்தேன்.

4.லிங்கதுரை இன்னும் வேறு சொத்துக்கள் வைத்திருக்கிறார் என்று சொன்னால் இருக்கலாம் அவர் தன்னுடைய மனைவி பெயரில் தான் எல்லா தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது. ஏற்கனவே தாவாசொத்தின்

கிரையம் நடந்த விவரம் எனக்கு தெரிந்திருந்தும் என் மனைவி தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்குக்காக நான் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல. கிரையம் கொடுத்ததற்கு பின்னிட்டு எனக்கு பிரதிவாதி வாடகைக்கு தான் கொடுத்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் வாடகையும் சரியாக செலுத்தாததால் தான் இரண்டாம் பிரதிவாதி தாவா சொத்தை தன் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று இந்த வழக்கில் எதிர் கோரிக்கை வைத்திருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

**4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 4–ம் பிரதிவாதி வசம் என் மனைவி பெயரில் இருந்து வரி வகையறாக்களை பெயர் மாற்றம் செய்ததற்கு ஏதும் எதிர்ப்பு மனு அல்லது பெயர் மாற்றம் செய்யக்கோரி ஏதாவது கடிதமும் நான் கொடுக்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V.SREE VIDYA
DN: cn=V.SREE VIDYA, ou=Judicial Officer, o=Principal Subordinate Judge,, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.